සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(II)**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**இலங்கையின் சட்ட முறைமைகள் (01-II)**

විභාග අංකය
Index No / சுட்டெண்
....................................

- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.**

---

1. i. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டிய நீதிமன்றங்களை பெயரிடுக.
   (அ) விவாகரத்து வழக்கு
   (ஆ) மக்கள் தீர்ப்பு (சர்வஜனவாக்கெடுப்பு) தொடர்பான தேர்தல் மனு
   (இ) அடிப்படை உரிமை மனுக்கள்
   (ஈ) கடற் கொள்ளை வழக்கு
   (உ) பிறப்பு பதிவுப் புத்தகம் தொடர்பான வழக்கு
   (ஊ) தாபரிப்பு தொடர்பான வழக்கு (புள்ளி 1X6 = 06)

   ii. முஸ்லிம் சட்டத்தின் பிரதான தோற்றுவாய்கள் இரண்டைக் (2) குறிப்பிடுக

   iii. பின்வரும் சட்டங்களின் பெயர்களை தருக.
   (அ) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க சட்டம்
   (ஆ) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க சட்டம்

   iv. ஒல்லாந்தரால் காணி பிணக்குகளை தீர்க்கும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்ட நீதிமன்றம் எது?

   v. மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறல் வயதெல்லையை முறையே குறிப்பிடுக.

   vi. யாருடைய அத்தாட்சிப்படுத்தலின் பேரில் குற்றப்பகர்வு (Indictment) வெளியிடப்படுகிறது?

   vii. இலங்கை அரசியலமைப்பின் மூலம் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் இரண்டைக் (2) குறிப்பிடுக

   viii. எந்தச் சட்டத்தின் அடிப்படையில் இலங்கையில் முதல்முறையாக நீதிமன்ற கட்டமைப்பு தாபிக்கப்பட்டது?

(புள்ளிகள் 2X7 = 14)

2. தேசவழமைச் சட்டத்தின் பிரதான தோற்றுவாய்களை குறிப்பிட்டு விளக்குக (20 புள்ளிகள்)

3. i. கண்டிச் சட்டத்தின் பிரயோகத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

   ii. கண்டியச் சட்டத்தின் கீழான திருமண முறைகள் இரண்டைக் (2) குறிப்பிட்டு விளக்குக, (05 புள்ளிகள்)

4. i. எழுத்தாணைகள் பிறப்பிக்கும் நீதமன்ற அதிகாரம் தொடர்பாக அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவை? (10 புள்ளிகள்)

   ii. எழுத்தாணை வகைகள் ஐந்தைக் (5) குறிப்பிட்டு அவற்றின் தன்மையை சுருக்கமாக விளக்குக (10 புள்ளிகள்)

5. i. மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்கு விசாரணை நடத்தப்படும் முறையினை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

   ii. மேல்நீதிமன்றத்தின் குற்றவியல் நியாயாதிக்கத்தை விளக்குக. (12 புள்ளிகள்)

6. i. இலங்கையினுள் முஸ்லிம் சட்டத்தின் பிரயோகத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. காதி நீதிமன்றம் என்றால் என்ன என்பதை பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

7. பின்வரும் விடயங்கள் தொடர்பில் சிறுகுறிப்பு எழுதுக.

   i. கடலாண்மை நியாயாதிக்கச் சட்டம் (Admiralty Jurisdiction Act)

   ii. நட்டாலியா அபயசுந்தர எதிர் கிறிஸ்தோபர் அபயசுந்தர (1998) இல.ச.அ

   iii. நீதிச்சேவை ஆணைக்குழு

   iv. பிணிக்கும் முற்த்தீர்ப்பு (Stare decisis) (புள்ளிகள் 5X4 = 20)

**************